### திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# திருவள்ளூர் மற்றும் திருத்தணி சட்டமன்றத் தொகுதியில் வாக்கு எண்ணும் முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் அறிவிப்பு!



திருவள்ளூர் மேற்கு மாவட்டம் தி.மு.க. சார்பில் திருவள்ளூர் மற்றும் திருத்தணி சட்டமன்ற தொகுதிகளில் வாக்கு எண்ணும் முகவர்களுடன் ஆலோசனை கூட்டம் கீழ்க்கண்ட அட்டவணைப்படி நடைபெறுகிறது

| தொகுதி | இடம் | நேரம் /தேதி |
|---|---|---|
| திருத்தணி சட்டமன்றத் தொகுதி | திருத்தணி நகரத்தில் உள்ள மாவட்ட கழக அலுவலகம் | காலை 10. மணி அளவில் 02.05.2026 சனிக்கிழமை |
| திருவள்ளூர் சட்டமன்றத் தொகுதி | திருவள்ளூர் சீவி நாயுடு சாலை கேஎஃப்சி கட்டிடத்தில் உள்ள மாவட்ட கழக அலுவலகம் | பகல் 12.மணி அளவில் 02.05.2026 சனிக்கிழமை |

சட்டமன்றத் தொகுதி வேட்பாளர்கள் தொகுதி பார்வையாளர்கள் மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், வாக்குச்சாவடி பாக முகவர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்

**பொருள்:** மே 4 தேதி அன்று 2026 சட்டமன்றத் தேர்தல் வாக்கு எண்ணிக்கையின் போது மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து

**திருத்தணி எஸ்.சந்திரன்**
செயலாளர்
திருவள்ளூர் மேற்கு மாவட்ட
தி.மு.க.



தென்காசி மாவட்டம் சுரண்டை அருகில் உள்ள மேலக்கலங்களைச் சேர்ந்த தி.மு.க.பிரமுகர் சாமிநாதன் (வயது 30) அவர்கள் 24.04.2026 அன்று ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே நடந்த விபத்தில் உயிரிழந்தார். மேலக்கலங்களில் அன்னாரது குடும்பத்தினரை கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை நேரில் சென்று ஆறுதல் கூறி, கழகத் தலைவர் அவர்கள் அறிவித்த விபத்து இழப்பீட்டுத் தொகை ரூபாய் 10 லட்சம் பெற்றுத் தரப்படும் என்றும் தெரிவித்தார். உடன் முன்னாள் தெற்கு மாவட்டச் செயலாளர் பொ.சிவபத்மநாதன், ஒன்றிய செயலாளர் அன்பழகன் உள்பட பலர் உள்ளனர்.

### தென்காசி மாவட்டம் - சுரண்டை மேலக்கலங்கல் கழகப் பிரமுகர்

# சாமிநாதன் சாலை விபத்தில் உயிரிழப்பு! கழக நிதி ரூ.10 லட்சம் பெற்றுத் தரப்படும்!

## அன்பகம் கலை – கலை.கதிரவன் – பொ.சிவபத்மநாதன் ஆறுதல்!

தென்காசி. ஏப். 28 –

தென்காசி மாவட்டம் சுரண்டை அருகே உள்ள மேலக்கலங்கல் ஊரைச் சேர்ந்தவர் தி.மு.க.பிரமுகர் சாமிநாதன் (வயது 30) அவர்கள் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் வாக்களித்து விட்டு திருப்பூருக்கு வேலைக்கு திரும்பி சென்ற போது

ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே நடந்த விபத்தில் சிக்கி உயிரிழந்தார். என்பதை அறிவிக்க வருந்துகிறோம். விபத்தில் உயிரிழந்த அன்னாரது குடும்பத்தினரை கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, தென்காசி சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் மரு.கலை கதிரவன்,தென்காசி தெற்கு மாவட்ட முன்னாள் செயலாளர் பொ.சிவபத்மநாதன் ஆகியோர் நேரில் சென்று சந்தித்து ஆறுதல் கூறினார்கள்.

தென்காசி மாவட்டம் சுரண்டை அருகில் உள்ள மேலக்கலங்கலைச் சேர்ந்த தி.மு.க. பிரமுகர் சாமிநாதன் (வயது 30) அவர்கள் திருப்பூரில் கூலி தொழிலாளியாக வேலை பார்த்து வந்தார். நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் வாக்களிப்பதற்காக 23.04.2026 அன்று மேலகலங்கலில் உள்ள வாக்குச்சாவடியில் தனது ஜனநாயக கடமையை நிறைவேற்றினார்.

பின்னர் தனது சொந்த ஊரிலிருந்து அன்று இரவு திருப்பூருக்கு சாமிநாதன் தனது நண்பர்களுடன் காரில் புறப்பட்டு சென்றார்ஸ்ரீவில்லி புத்தூர் அருகே சென்றபோது கார் விபத்து க்குள்ளானது. இதில் சம்பவ இடத்திலேயே தி.மு.க. பிரமுகர் சாமிநாதன் அவர்கள் உயிரிழந்தார்.

விபத்தில் உயிரிழந்த தி.மு.க. பிரமுகர் சாமிநாதனுக்கு வெண்ணிலா (வயது25) மனைவியும், அகஸ்தியா ( வயது4) என்ற பெண் குழந்தையும் உள்ளது.

இது பற்றிய தகவல் அறிந்ததும் மேலக்கலங்கலில் உள்ள அன்னாரது இல்லத்திற்கு கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை,தென்காசி சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் மரு. கலை கதிரவன், தென்காசி தெற்கு மாவட்ட முன்னாள் செயலாளர் பொ.சிவபத்மநாதன் மற்றும் ஒன்றிய செயலாளர் அன்பழகன், ஆலங்குளம் ஒன்றிய குழு தலைவர் திவ்யா மணிகண்டன்,துணை தலைவர் ராஜாமணி, ஊராட்சி மன்ற தலைவர் ராஜ்குமார், மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் முருகையா, கிளைச் செயலாளர் கணேசன் அமைப்புசாரா ஓட்டுநர் அமைப்பாளர் அண்ணாமலை, ஊத்துமலை இளம் தொழில் அதிபர் தங்கம், அருணாபாண்டியன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உடன் சென்று நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார்கள்.

அப்போது விபத்தில் உயிரிழந்த தி.மு.க.பிரமுகர் சாமிநாதன் அவர்களை இழந்து வாடும் குடும்பத்தினரிடம் கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை ஆறுதல் கூறி தி.மு.க.வைச் சேர்ந்த கட்சியினர் விபத்தில் மரணம் அடைந்தால் அந்த குடும்பத்திற்கு ரூபாய் 10 லட்சம் ரூபாய் வழங்குவதாக ஏற்கனவே கழகத் தலைவர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

அந்த வகையில் விபத்தில் உயிரிழந்த சாமிநாதன் அவர்களை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு ரூபாய் 10 லட்சம் பெற்றுத் தரப்படும் என்றும் தெரிவித்தார்.

### பாளையங்கோட்டை தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின்

# அனைத்துக் கட்சி நிர்வாகிகள் - கழக உடன் பிறப்புகளுக்கு நெஞ்சார்ந்த நன்றி!

## கழக வேட்பாளர் மு.அப்துல் வகாப் அறிக்கை!



நெல்லை, ஏப். 29 -

நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கழக வேட்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ.வின் நன்றி அறிக்கை வருமாறு.

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் வேட்பாளராக களத்தில் நின்ற போது,என்னுடன் உணர்வோடு பயணித்து, தொடர்ந்து பிரச்சாரம் செய்த மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் அனைத்துக் கட்சி நிர்வாகிகளுக்கும், தொண்டர்களுக்கும்,எல்லா வகையிலும் உறுதுணையாக நின்ற கழக உடன்பிறப்புகளுக்கும்,

ஆதரவு கேட்டு சென்ற நேரத்தில், திராவிட மாடல் அரசின் முதல்வர் தளபதியார் அவர்களின்,சமூக நீதி, ஒருங்கிணைந்த வளர்ச்சி,


தொலைநோக்கு சிந்தனை, மகளிர் ஈடேற்றம், மாணவ, மாணவியரின் முன்னேற்றம் ஆகியவைகளை அடிப்படையாகக் கொண்ட நலத்திட்டங்களுக்கு அங்கீகார மாகவும், மலர்ந்த முகத்துடன் வரவேற்று அளவற்ற பாசத்தை பொழிந்து சிறப்பான வரவேற்பு வழங்கி, ஆதரவு தெரிவித்து வாக்களித்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வெற்றி பெற்று மீண்டும் திராவிட மாடல் 2.0 ஆட்சி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் அமையும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# பல்லடம் - திருப்பூர் தெற்கு சட்டமன்றத் தொகுதி நிர்வாகிகளுக்கு நன்றி!

## மாவட்டச் செயலாளர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ. அறிக்கை!



திருப்பூர், ஏப். 29 -

பல்லடம் திருப்பூர் தெற்கு சட்டமன்ற தொகுதி நிர்வாகிகளுக்கு திருப்பூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ. தனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளார்.

இதுகுறித்து திருப்பூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ., தனது அறிக்கையில் கூறியதாவது :

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் சார்பில் பல்லடம் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளராக உதயசூரியன் சின்னத்தில் களத்தில் நின்ற போது, என்னுடன் உணர்வோடு பயணித்து, தொடர்ந்து பிரச்சாரம் செய்த மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் அனைத்துக் கட்சி நிர்வாகிகளுக்கும், தொண்டர்களுக்கும், எல்லா வகையிலும் உறுதுணையாக நின்ற கழக உடன்பிறப்புகளுக்கும், ஆதரவு தெரிவித்து வாக்களித்த அனைத்து நல்வுள்ளங்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

இதேபோல் திருப்பூர் தெற்கு சட்டமன்ற தொகுதியில் போட்டியிட்ட திருப்பூர் வடக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் ந. தினேஷ்குமாருக்கு "உதய சூரியன்" சின்னத்தில் வாக்களிக்க உழைத்த மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகளுக்கும், அனைத்து உள்ளாட்சிப் பிரதிநிதிகள், கழக சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட அனைவருக்கும் திருப்பூர் மத்திய மாவட்ட தி.மு. கழகத்தின் சார்பிலும், எனது சார்பிலும் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்வதாக திருப்பூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ., தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### திருப்பூர் கிழக்கு மாவட்டம் - காங்கேயம் - தாராபுரம் சட்டமன்றத் தொகுதிகளில்

# தேர்தல் பணியாற்றிய கழக கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகளுக்கு நன்றி!

## திருப்பூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன் அறிக்கை!



திருப்பூர், ஏப். 29 -

திருப்பூர் கிழக்கு மாவட்டம் காங்கேயம் தாராபுரம் சட்டமன்றத் தொகுதிகளில் தேர்தல் பணியாற்றிய தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகளுக்கு திருப்பூர் கிழக்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டல த்தலைவர் இல.பத்மநாபன் தனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துள்ளார்.

இது குறித்து திருப்பூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு : திருப்பூர் கிழக்கு மாவட்டம் காங்கேயம் தாராபுரம் சட்டமன்ற தொகுதியில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் சார்பில் கழக வேட்பாளர்களாக "உதய சூரியன்" சின்னத்தில் போட்டியிட்ட கழக துணைப் பொதுச் செயலாளர், அமைச்சர் மு.பெ. சாமிநாதன் (காங் கேயம்) மாவட்ட மருத்துவர் அணி துணை அமைப்பாளர் டாக்டர். தி.இந்திராணி (தாராபுரம்) ஆகியோருக்காக திராவிட முன்னேற்ற கழக நிர்வா கிகள், மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் அனை வரும் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியில் நடைபெற்ற சாதனை களை ஒவ்வொன்றாக வீடுகள் தோறும் எடுத் துக்கூறி கண் துஞ்சாது தேர்தல் பணி மேற் கொண்ட மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக, வார்டு கழக, கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள் அனைத்து அணிகளின் நிர்வாகிகள் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகளைச் சேர்ந்த நிர்வாகிகள், தோழர்கள் உள்ளிட்ட அனைத்து நெஞ்சங்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு திருப்பூர் கிழக்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல. பத்மநாபன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## மாநகராட்சிப் பள்ளிகளில் அதிக அளவில் மாணவர் சேர்க்கை!

சென்னை, ஏப். 29–

தமிழக சட்டப் பேரவைக்கான தேர்தல் 23ம் தேதி முடிந்துள்ள நிலையில், 2026–2027ம் ஆண்டுக்கான பள்ளி மாணவர் சேர்க்கையை அதிகரிக்கும் வகையில், சென்னை மாநகராட்சி நிர்வாகத்தின் சார்பில் வீடுவீடாக சென்று மாணவர் சேர்க்கை இயக்கத்தை தீவிரப்படுத்தி யுள்ளது. இதுவரையில் சுமார் 5000 க்கும் மேற்பட்ட புதிய குழந்தைகள் சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்நிலையில், வரும் வாரங்களில் இந்த எண்ணிக்கையை மேலும் அதிகரிக்க மாநகராட்சிஅதிகாரிகள் இலக்கு வைத்துள்ளனர்.

ஏப்ரல் மாதத்தின் 3வது வாரம் வரையில் மாநகராட்சிப் பள்ளிகள் முழுவதும் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் சேர்க்கை பெற்றுள்ளதாக மாநகராட்சி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேலும் இந்த மாத இறுதிக்குள் சேர்க்கை எண்ணிக்கை 6 ஆயிரத்தை எட்டும் என்றும் அவர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். அத்துடன் மே மாதத்துக்குள் இது 7 ஆயிரம் வரை அதிகரிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த ஆண்டு மாணவர் சேர்க்கையைவிட இந்த ஆண்டு மாணவர்கள் சேர்க்கை அதிகரிக்க முயற்சிகளை அதிகாரிகள் மேற்கொண்டு வருவதாக கூறப்படு கிறது.

அதற்காக அந்தந்த பள்ளிகளின் முன்பாக பதாகைகள் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தனர். மாநகராட்சியில் 206 தொடக்கப் பள்ளிகள், 130 நடுநிலைப் பள்ளிகள், 46 உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 35 மேனிலைப் பள்ளிகள் என 417 பள்ளிகள் இயங்கி வருகின்றன. இந்த பள்ளிகளில் 1 லட்சத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் படித்து வருகின்றனர்.

மேலும் 2025–2026ம் கல்வி ஆண்டில் மாணவர் சேர்க்கையில் குறிப்பிடத்தக்க உயர்வு காணப்பட்டது.

### அரக்கோணம் – திருத்தணி வழித்தடத்தில் – 21 நாட்கள்

# பராமரிப்புப் பணி காரணமாக மின்சார ரயில்கள் ரத்து!

## சென்னை ரயில்வே கோட்டம் அறிவிப்பு!

சென்னை, ஏப்.28-

அரக்கோணம் திருத்தணி இடையேயான குறிப்பிட்ட 2 மின்சார ரயில்களின் சேவையானது ஏப். 27 முதல் வரும் மே 17 ஆம் தேதி வரை 21 நாள்கள் முழுமையாக ரத்து செய்யப்படுவதாக சென்னை ரயில்வே கோட்டம் சார்பில் அறிவிக்கப் பட்டுள்ளது.

இது குறித்த செய்திக்குறிப்பு விவரம் வருமாறு:-

சென்னை சென்ட்ரல் அரக்கோணம் பிரிவில் அரக்கோணம் பணிமனையில் பராமரிப்பு மற்றும் தொழில்நுட்பப் பிரிவு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதையடுத்து ஏப். 27 ஆம் தேதி திங்கள்கிழமை முதல் வரும் மே 17 ஆம் தேதி வரையில் மொத்தம் 21 நாள்கள் குறிப்பிட்ட 2 மின்சார ரயில்கள் ரத்து செய்யப்படுகின்றன. அதன்படிஅரக்கோணத்தி லிருந்து அதிகாலை 4 மணி மற்றும் காலை 5 மணிக்குப் புறப்பட்டு திருத்தணி செல்லும் ரயில்களும் முழுமையாக ரத்து செய்யப்படுகின்றன.

திருத்தணியிலிருந்து 27 ஆம் தேதி முதல் வரும் மே 16 ஆம் தேதி வரை யில் இரு மின்சார ரயில்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. அதன்படிகுறிப் பிட்ட அந்த நாட்களில் திருத்தணியிலிருந்து இரவு 9.15 மணிக்கும், 11.10 மணிக்கும் புறப்பட்டு அரக்கோணம் செல்லும் மின்சார ரயில்கள் முழுமையாக ரத்து செய்யப்பட்டுள்ளன.

பகுதியளவு காம்ப்ளக்ஸிலிருந்து ரத்து: மூர்மார்க்கெட் திங்கள்கிழமை (ஏப்.27) முதல் வரும் மே 16 ஆம் தேதி வரையில் பிற்ப கல் 11 மணிக்குப் புறப்பட்டு அரக்கோணம் செல்லவேண்டிய மின்சார ரயில் அதற்குப்பதிலாக திருவாலங்காடு வரை மட்டுமே இயக்கப்படும்.


திருத்தணியிலிருந்து பிற்பகல் 12.35 மணிக்குப் புறப்படவேண்டிய மின் சார ரயில் அதற்குப் பதிலாக திருவாலங்காட்டிலிருந்து புறப்பட்டு மூர் மார்க்கெட் செல்லும். மூர் மார்க்கெட்டிலிருந்து மேற்குறிப்பிட்ட கால கட்டங்களில் இரவு 11.55 மணிக்குப் புறப்படும் மின்சார ரயில் அரக்கோணத்துக்குப் பதிலாக திருவா லங்காடு நிலையத்தில் நிறுத்தப் படும்.

இவ்வாறு ரயில்வே கோட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இராம. அரங்கண்ணல்

### ஏப்ரல் 29 (1999)



பள்ளிநாட்கள் தொட்டு தலைவர் கலைஞர் அவர்களுக்கு உற்ற தோழராக திகழ்ந்தவர். கலைஞர் அவர்களால் பொதுவாழ்க்கைக்கு அறிமுகப்படுத்தப்பட்டவர்.

தந்தை பெரியாரின் 'குடியரசு' பத்திரிகையில் பணியாற்றினார். பின்னர், 'அறப்போர்' என்ற பெயரில் வார இதழ் நடத்தினார். இதையடுத்து அண்ணாவின் 'திராவிட நாடு' பத்திரிகையில் பணியாற்றினார்.

தமிழக சட்டப்பேரவை உறுப்பினராக தொடர்ந்து மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டும், கலைஞர் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட குடிசை மாற்று வாரியத்தின் தலைவராகவும் சிறப்புற பணியாற்றினார்.

கழகத்தில் செயற்குழு, பொதுக்குழு, தணிக்கைக்குழு உறுப்பினராக பணியாற்றியவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**